<u>திருவேற்காடு நகராட்சி</u>
<u>நகர்மன்ற அவசரக் கூட்டம்</u>

**2020 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 05 ம் நாள் வியாழக்கிழமை மாலை 05.00 மணிக்கு திருவேற்காடு நகராட்சி அலுவலகத்தில் நடைபெறும் நகர்மன்ற அவசரக் கூட்ட நடவடிக்கைகள்.**

**நகராட்சி அலுவலகம்,**
**திருவேற்காடு**

**தனி அலுவலர் (ம) ஆணையர்,**
**திருவேற்காடு நகராட்சி.**

**நாள்: 05.03.2020**

---

## <u>பொருள் எண். 1</u>

திருவேற்காடு நகராட்சிக்கு சொந்தமான மூன்றாண்டு குத்தகை இனங்களான வாகன நுழைவுக் கட்டணம் வசூலிக்கும் உரிமைக்கான (2020 – 2021 முதல் 2022 – 2023 வரை) பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கை மேற்க் கொண்டு ஒப்படைப்பு செய்வதற்கு கடந்த 30.01.2020–ல் பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் அறிவிக்கப்பட்டு நிர்வாக காரணங்களால் தேதி குறிப்பிடாமல் தள்ளி வைக்கப்பட்டது. மீண்டும் மேற்கண்ட இனத்திற்கு மறு பொது ஏலம் மற்றும் மறு ஒப்பந்தப் புள்ளி கோரவும், இந்நகர மன்றத் தீர்மானம் எண்.969 நாள் 30.01.2020–ல் அனுமதி அளிக்கப்பட்டதை தொடர்ந்து,

மேற்படி இனத்திற்கான மறு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி 02.03.2023–ல் நடைபெற்றதில், 11 நபர்கள் மட்டும் பொது ஏலத்தில் கலந்து கொண்டனர், இவ்வினத்திற்கு ஒப்பந்தப் புள்ளிகள் ஏதும் வரப்பெறவில்லை, மறு பொது ஏலம் மட்டுமே நடைபெற்றது. மேற்கண்ட பொது ஏலத்தில் கலந்து கொண்ட 11 நபர்களில், திரு.K. ஆனந்த் S/o கமலக்கண்ணன், என்பவரால் உச்ச ஏலக் கேள்வியாக ரூ. 14,30,000/– கேட்டுக்கொள்ளப்பபட்டது. இதன் படி உச்ச கேள்வி தொகை ரூ.14,30,000/– சரக்கு மற்றும் சேவை வரியாக (18%) ரூ. 2,57,400/– மற்றும் வருமான வரியாக ரூ. 32,032/– ஆக மொத்தம் ரூ. 17,19,432/– (2020 – 2021-ம் ஆண்டிற்கு) இவ்வினத்திற்கான தொகையாகும். மேலும் மறு பொது ஏலத்தில் கலந்து கொள்வதற்கு திரு.K. ஆனந்த் S/o கமலக்கண்ணன், அவர்களால் ரூ 15,00,000/– வைப்புத் தொகை செலுத்தப்பட்டுள்ளது. இதன் படி இறுதியான தொகை ரூ.17,19,432/- தொகையில் அன்னாரால் செலுத்தப்பட்டுள்ள வைப்புத் தொகை ரூ.15,00,000/- போக மீதி தொகை ரூ.2,19,432/– ஆணையர், திருவேற்காடு நகராட்சி பெயரில் வரைவு காசோலையாக செலுத்திட சம்மந்தப்பட்ட திரு.K. ஆனந்த் S/o கமலக்கண்ணன், அவர்களுக்கு 03.03.2020–ல் அறிவிப்பு அனுப்பட்டது. இவ்வறிவிப்பின் பேரில் திரு.K. ஆனந்த் S/o கமலக்கண்ணன், அவர்கள் செலுத்தப்பட வேண்டிய தொகை ரூ.2,19,000/-க்கு ஆணையர் பெயரில் வரைவோலை ( எண்.401632 நாள்.04.03.2020–ல்) நகராட்சியில் 04.03.2020-ல் சமர்பித்துள்ளார்.

இந்நிலையில் குத்தகை இனமான வாகன நுழைவுக் கட்டணம் வசூலிக்கும் உரிமைக்கான குத்தகை நடவடிக்கைகளை இறுதி செய்யக்கூடாது, கட்டணம் வசூலிக்க கூடாது என, சென்னை உயர்நீதி மன்றத்தில் W.M.P.No.6550/ 2020 & W.P.No.5595 / 2020–ன்படி 1. அரசு செயலாளர், நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை, 2. ஆணையர், நகராட்சி நிர்வாகம் துறை மற்றும் 3. ஆணையர், திருவேற்காடு நகராட்சி ஆகியோரை பொருப்பாக்கி திரு.S.B. ஹரிராஜன், வழக்கறிஞர் அவர்களால் வழக்கு தொடரப்பட்டு, மேற்படி வாகன நுழைவு கட்டணம் வசூலிக்கக் கூடாது மற்றும் இறுதி செய்யக் கூடாது என சென்னை உயர்நீதி மன்றத்தில் உத்தரவிடப்பட்டுள்ளதாக நகராட்சியின் வழக்கறிஞர் திரு. மோகன்ராஜ் அவர்களால் தொலைப்பேசியின் மூலம் தெரிவிக்கப்பட்டது. மேலும் இதனை தொடர்ந்து உயர்நீதி மன்றத்தால், பிறப்பிக்கப்பட்ட தடை உத்தரவின் நகலினை திரு. S.B. ஹரிராஜன், வழக்கறிஞர் அவர்களால் 04.03.2020–ம் தேதிய அன்று அனுப்பி வைக்கப்பட்டு, இந்நகராட்சியில் 05.03.2020–ல் பெறப்பட்டுள்ளது.

**1.** இதனை மேற்கொண்டு குத்தகை இனமான வாகன நுழைவுக் கட்டணம் வசூலிக்கும் உரிமத்திற்கு தடை உத்தரவு சென்னை உயர்நீதி மன்றத்தால், பெறப்பட்டுள்ளதால், இதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் நிறுத்தி வைக்கவும், எதிர் வரும் உயர்நீதி மன்ற .தீர்ப்பு மற்றும் வழிகாட்டுதல் அடிப்படையிலும் நடவடிக்கைகள் மேற்கொள்ளலாம், பொது ஏலம் மற்றும் வாகன வசூல் நடவடிக்கைகளை மேற்கொள்ளாமல் நிறுத்தி வைக்கவும், மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**2.** இந்நகராட்சியின் மற்றொரு குத்தகை இனமான பேரூந்து நிலையம் அருகே உள்ள கட்டண கழிப்பிடம் மற்றும் குளியல் அறைக்கு கட்டணம் வசூலிக்கும் உரிமைக்கு மேற்படி தேதிகளில் நடைப்பெற்ற பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளிகளில் எவரும் தொகை செலுத்தி கலந்து கொள்ளாத நிலையில், மறு பொது ஏலம் கோரி குத்தகை ஒப்படைக்கும், நாள் வரையில் நிர்வாக நலன் கருதி மேற்படி இனத்திற்கு துறை பூர்வமாக வசூல் தொடந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலககுறிப்பு:**

அ) குத்தகை இனமான வாகன நுழைவுக் கட்டணம் வசூலிக்கும் உரிமத்திற்கு தடை உத்தரவு சென்னை உயர்நீதி மன்றத்தால், பெறப்பட்டுள்ளதால், இதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் நிறுத்தி வைக்கவும், எதிர் வரும் உயர்நீதி மன்ற .தீர்ப்பு மற்றும் வழிகாட்டுதல் அடிப்படையிலும் நடவடிக்கைகள் மேற்கொள்ளலாம், பொது ஏலம் மற்றும் வாகன வசூல் நடவடிக்கைகளை மேற்கொள்ளாமல் நிறுத்தி வைக்கவும், மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) இந்நகராட்சியின் மற்றொரு குத்தகை இனமான பேரூந்து நிலையம் அருகே உள்ள கட்டண கழிப்பிடம் மற்றும் குளியல் அறைக்கு கட்டணம் வசூலிக்கும் உரிமைக்கு மேற்படி தேதிகளில் நடைப்பெற்ற பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளிகளில் எந்த ஒரு நபரும் தொகை செலுத்தி கலந்து கொள்ளாத நிலையில், மறு பொது ஏலம் கோரி குத்தகை ஒப்படைக்கும், நாள் வரையில் நிர்வாக நலன் கருதி மேற்படி இனத்தின் வசூலினை தொடந்து, துறை பூர்வமாக மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.656/2010/அ1 )**

**நகர்மன்ற தீர்மான எண். 1023** **நாள்.05.03.2020**

**தீர்மானம் :**

---

**தனி அலுவலர் (ம) ஆணையர்,**
**திருவேற்காடு நகராட்சி.**